**தலைப்பு 108 – அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதென்றும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆம் திகதி 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(VI) ஆம் பந்தியின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதி அத்திகதியில் உள்ளவாறான காசேட்டில் குறிப்பிடப்பட்ட மீதிக்கு சமமான பெறுமதியொன்று இல்லாதிருந்தமையால் அந்த மீதியை இணக்கம் செய்வதற்காக கட்டுநிதி சீராக்கல் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட கட்டுநிதி சீராக்கல் கணக்கில் கீழே குறிப்பிடப்படுகின்ற சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) | கணனி அச்சிடல் குறிப்புக்களுடன் பரீட்சை மீதி ரூபா 350,000 இனால் இணக்கமின்மை கட்டுநிதி சீராக்கல் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி அச்சிடல் குறிப்புக்களுடன் பரீட்சை மீதி இணங்காமை கட்டுநிதி சீராக்கல் கணக்கில் காண்பிக்கப்பட வேண்டும். | அமைச்சின் புத்தகங்களினதும் திறைசேரி அச்சிடல் குறிப்புக்களினதும் பிரகாரம் ஏனைய திணைக்களங்களினாலும் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 109,640 மாத்திரமாகும். |
| (ஆ) | கட்டுநிதி சீராக்கல் கணக்கில் காண்பிக்கப்பட வேண்டிய முற்பண வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 1,515 மற்றும் ரூபா 1,323,679 ஆக இருந்த போதிலும், அது முறையே ரூபா 1,934,297 மற்றும் 3,781,048 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசாகவும், வரவு பதிவுகளின் மூலமும் மேற்கொள்ளப்பட்ட முற்பண கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளின் கூட்டுத்தொகை கட்டுநிதி சீராக்கல் கணக்கில் காண்பிக்கப்படல் வேண்டும். | பொதுவாக கட்டு நிதி சீராக்கல், முற்பண கணக்கின் வரவு பதிவுகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் முற்பண கணக்கில் செலவு ரூபா 3,781,048 தொகை மற்றும் முற்பண கணக்கில் வரவு ரூபா 1,934,297 மூலம் கட்டுநிதி சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | கட்டுநிதி சீராக்கல் கணக்கில் காண்பிக்கப்பட்ட மீதி ரூபா 359,583 ஆக இருந்த போதிலும், திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,021,290 ஆக இருந்தது. | திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரமான கட்டுநிதி கணக்கின் மீதி கட்டுநிதி கணக்கின் மீதிக்கு சமமாக இருக்க வேண்டும். | திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 1,021,290 ஆக காண்பிக்கப்பட்ட போதும், அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் 2019.12.31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட ரூபா 661,707 தொகை குறைக்கப்பட்டதன் பின்னர் அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 359,583 தொகையாக பதியப்பட்டுள்ளது. |

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

----------------------------------------------
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் ரூபா 8,280,485 தொகை மற்றும் கொடுப்பனவுகள் ரூபா 6,622,352 தொகைகள் முறையே ரூபா 7,155,662 மற்றும் ரூபா 5,497,529 ஆக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பண பெறுவனவுகள் மற்றும் முற்பண கொடுப்பனவுகள் திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்யப்பட்டு வரவு மற்றும் செலவு பெறுமதிகளை கவனத்தில் கொண்டு நிதிக்கூற்றில் முற்பண பெறுவனவுகள் ரூபா 7,155,622 மற்றும் முற்பண கொடுப்பனவுகள் ரூபா 5,497,523 ஆக சரியாக பதியப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதிச் செயலாற்றல் கூற்றில் பிரதான பேரேட்டு செலவினத்தின் கீழ் திறைசேரிக்கு கட்டுநிதி செலுத்துதல்கள் ரூபா 761,707 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. | பிரசுரிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் தகவல்களை சரியாக அறிக்கையிடுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

--------------------------------------
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் ஏனைய செலவின தலைப்புக்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,559,942 | ஏனைய செலவின தலைப்புக்களுக்காக செலவிடப்பட்ட செலவினங்களை கணிப்பீடு செய்யும் போது ஏனைய செலவின தலைப்புக்களின் | இது ஏனைய திணைக்களங்களுக்காக செலவிடப்பட்ட கொடுப்பனவு அல்லாதிருந்ததுடன் பதவியணியினரைக் |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான செலவினம் ரூபா 1,035,355 ஆக பதியப்பட்டிருந்தது. | கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகளின் கூட்டுத் தொகையை எடுக்க வேண்டும். | கலைத்ததன் காரணமாக அவர்களுக்குரிய பணிக்கொடையாக அமைச்சிற்கு கிடைக்க வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்காக ஓய்வூதிய திணைக்களத்தின் அனுமதியின் அடிப்படையில் வைக்கப்பட்ட குறுக்கு பதிவுகள் மாத்திரமாகும். |
| (ஆ) | ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 106,377,683 தொகையான ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினம், செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 106,727,683 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆளணி சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் பெறுமதி ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் கணிப்பிடப்பட்டு காண்பிக்கப்பட வேண்டும். | திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் ஆளணி சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 106,727,683 ஆகும். |
| (இ) | ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பண அறவிடல்கள் ரூபா 6,956,806 தொகை மற்றும் கொடுப்பனவுகள் ரூபா 6,620,837 ஆக காண்பிக்க வேண்டிய போதிலும், முறையே அது ரூபா 3,374,614 மற்றும் 3,563,232 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பணங்களை அறவிடல் மற்றும் கொடுப்பனவுகளை கணிப்பீடு செய்யும் போது குறுப்பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பெறுமதியும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | முற்பண கணக்குகளில் வரவுப் பதிவுகளைக் கவனத்தில் கொள்ளாமல் காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு முற்பண அறவிடல்கள் மற்றும் முற்பண செலுத்துதல்களாக முறையே ரூபா 3,374,614 மற்றும் ரூபா 3,563,232 தொகைகள் என காசுப் பாய்ச்சல் கூற்றில் பதியப்பட்டுள்ளது. |

### 1.6.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்மைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறைமையில் வேறுபாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பாக மீளாய்வினை மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு விஷேடமாக சமர்ப்பிக்கப்படாதிருந்த போதும், மேற்கொள்ளப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரதியும் இது தொடர்பாக கலந்துரையாடப்படுகின்ற முகாமைத்துவ கணக்காய்வு குழு அறிக்கையின் பிரதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலேயுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இது தொடர்பாக முறையான கூற்றினை எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மிகை நிதி ஏற்பாடு பெறப்பட்டமையின் காரணமாக 02 மூலதன செலவின விடயங்களின் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 905,998 கூட்டுத் தொகையான அதாவது 36 சதவீதம் மற்றும் 85 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செலவின விடயங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூலதன நிதி ஏற்பாடுகளில் 15 சதவீத செலவினங்களை செய்யாமல் நிறுத்தி வைக்குமாறு திறைசேரி சுற்றறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மூலதன செலவினங்களில் 15 சதவீதமான பெறுதிக்கு சமமான பெறுமதி கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட செலவின விடயங்களில் சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது சேமிப்பினை விஞ்சி ரூபா 1,790,929 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் வருடத்தின் போது அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 திட்டமிடல்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் பிரதான பணிகளை இலக்காகக் கொண்டு மீளாய்வாண்டில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமையின் காரணமாக அமைச்சின் ஏழு பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்பட வேண்டிய பிரதான பணிகளை இலக்கிட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூட்டங்களின் போது கலந்துரையாடி தேவையான பிரகாரம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 3.2 நட்டம் மற்றும் இழப்புக்கள்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காப்புறுதியினால் மேவுகை செய்யப்படாத 4 வாகன விபத்துக்களின் நட்டம் ரூபா 478,579 ஆக இருந்ததுன் அந்த நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்டம் அறவிடப்பட வேண்டும். | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

4. **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வறுமை ஒழிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு (SME) உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் bepost.LK ஈ - தொழில் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் இனங்காணப்பட்டிருந்த போதிலும், நிதி ஏற்பாடு இல்லாமை மற்றும் தபால் வலையமைப்பு மென்பொருள் முறைமையின் குறைபாடுகளினால் நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்கும் போது இனங்காணப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வினைக் கண்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைய வேண்டும். | ஆரம்பத்தின் போது இனங்காணப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளும் மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படாதிருந்த துடன் மென்பொருள் முறைமை மந்தகதியில் இருந்தமை மற்றும் அவ்வப்போது ஏற்பட்ட பின்னடைவுகளினால் போதியளவான நலனாளிகளின் எண்ணிக்கையொன்று இதற்காக தொடர்புபடுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. தேவையான பிரகாரம் மென்பொருள் முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கும், நிகழ்ச்சித் திட்டத்திற்காக விளம்பர நடவடிக்கை செய்வதற்கும் உரிய ஆண்டில் போதியளவான நிதி ஏற்பாடு கிடைக்கப் பெறாமையினால் உரிய இலக்குகளை அடைந்து கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |